# பாடம் – 7

# வங்கியியல்- II

## (BANKING)

Prepared by


# M.Muthu Selvam

M.Sc.,M.Com.,M.Ed.,M.Phil

PG.Asst., (Commerce)

MLWA.Hr.Sec.School

Madurai -1

Mail Id : dhakshina29@gmail.com

Mobile No : 98421 04826

# வணிக வங்கிகளின் பணிகள்:
# FUNCTIONS OF COMMERCIAL BANKS





Figure-1: Functions of Commercial Banks

- 1. முதன்மை பணிகள் அல்லது வங்கி பணிகள்
- 2. இரண்டாம்தர பணிகள் அல்லது துணைப் பணிகள்

# 1. முதன்மை பணிகள் அல்லது வங்கி பணிகள்
# Primary or Banking Functions

- 1. வைப்புகளை ஏற்றல்:
  (Accepting Deposits)
- பொது மக்களிடமிருந்து வங்கிகள் வைப்பை பெறுகின்றன.
- இந்த வைப்புகளுக்கு வட்டியுண்டு.
- பணத்திற்கு பாதுகாப்பும் கிடைக்கிறது.



# 1. வைப்புகளை ஏற்றல்:
# (Accepting Deposits)



- பலதரப்பட்ட வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக வங்கிகள் பல்வேறு வகையான வைப்புகளை ஏற்றுக் கொள்கின்றன.
- வைப்புகள் நான்கு வகைப்படும்.

# அ. நிலை வைப்பு அல்லது காலவைப்பு கணக்கு
## Fixed or Time Deposit Account




- ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பணம் இட்டு வைப்பில் வைக்கப்பட்டால், அவற்றை நிலை வைப்பு என்கிறோம்.
- காலம் அதிகமாகும் போது வட்டி வீதமும் அதிகமாகிறது.

# அ. நிலை வைப்பு அல்லது காலவைப்பு கணக்கு
## Fixed or Time Deposit Account

- நிலை வைப்பிற்கான பணம் பெற்றபின் வங்கி அதற்கான நிலை வைப்பு ரசீது வழங்குகிறது
- நிலை வைப்பாளர் இதனை பிணையமாக வைத்து கடன் பெறலாம்.



# ஆ. சேமிப்பு வைப்பு கணக்கு:
# Savings Bank Deposits Account

- இக்கணக்கில் எத்தனை முறை வேண்டுமானாலும் பணத்தை செலுத்தலாம்.
- ஆனால் வாரத்தில் ஒரு முறையோ அல்லது இரு முறையோ தான் பணத்தை திரும்ப எடுக்க முடியும்.




# ஆ. சேமிப்பு வைப்பு கணக்கு:
## Savings Bank Deposits Account



- இவ்வகை கட்டுப்பாடுகள் அடிக்கடி பணத்தை திரும்ப எடுக்கும் பழக்கத்தை முறியடிப்பதற்காக உள்ளன.
- எந்த ஒரு நபரும் சேமிப்பு வைப்பு கணக்கை தொடங்கலாம்.

# இ. நடப்பு வைப்பு கணக்கு:
## Current Deposits Account




- இதனை வரம்புள்ள கணக்கு என்றும் கூறலாம்.
- இக்கணக்கில் வங்கி நேரத்தில் எப்போது வேண்டுமானாலும் பணத்தை இட்டு வைக்கவோ, திரும்ப எடுக்கவோ முடியும்.

# இ. நடப்பு வைப்பு கணக்கு: Current Deposits Account

- இவ்வகை கணக்கில் கேட்கும் போது பணம் தர வேண்டியுள்ளதால் வங்கி வட்டி எதுவும் தருவதில்லை.

# இ.   நடப்பு வைப்பு கணக்கு:
## Current Deposits Account





- இவ்வகை கணக்குகள் வியாபாரிகள், நிறுமங்கள் மற்றும் பொது அமைப்புகளுக்கு மிகவும் உபயோகமாக உள்ளது.

# ஈ.தொடர்வைப்பு கணக்கு:

## Recurring deposits Accounts

- இவ்வகை கணக்கில் இட்டு வைப்பாளர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, ஒரு குறிப்பிட்ட தொகையை ஒவ்வொரு மாதமும் இட்டு வைக்கிறார்.
- குறிப்பிட்ட காலகெடு முடிந்தபின் அவர் தான் இட்டு வைத்த பணத்துடன், அதன் மீதான வட்டியையும் திரும்ப பெறுகிறார்.



# ஈ.தொடர்வைப்பு கணக்கு:
## Recurring deposits Accounts

- மற்ற கணக்குகளைவிட இக்கணக்கில் வட்டிவீதம் அதிகமாக உள்ளது.
- இட்டு வைப்பாளருக்கு காலக்கெடுவிற்கு முன் பணம் தேவைப்பட்டால், அவர் இட்டு வைத்த பணத்தை திரும்ப பெறலாம், அல்லது இந்த தொடர் இட்டு வைப்பின் மீது கடன் பெறலாம்.




# 2. கடன் மற்றும் முன்பணம் வழங்குதல்
## Making loans and advances




- தேவைப்படுவோருக்கு வங்கிகள் கடன் மற்றும் முன்பணம் வழங்குகின்றன.
- இவற்றின் மீது வட்டி வசூலிக்கப்படுகிறது.

# 2. கடன் மற்றும் முன்பணம் வழங்குதல்
## Making loans and advances

- தொழிற்சாலைகளுக்கும் வியாபாரத்திற்கும் இவ்வகையில் உதவுவதன் மூலம் ஒரு நாட்டின் பொருளாதாரத்தை மேம்பாடு அடைய செய்கிறது.
- இவ்வகை கடன் மற்றும் முன்பணத்தின் வகைகளாவன :



# அ. கடன்கள் : Loans

- வங்கிகள் குறுகிய, மத்திய மற்றும் நீண்ட கால கடன்களை வழங்குகிறது.
- இக்கடன்கள் பிணையங்களின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.
- குறுகிய கால கடன்கள் ஓராண்டிற்குள் திருப்பி செலுத்தப்பட்ட வேண்டியவை.



# அ. கடன்கள் : Loans




- மத்திய கால கடன்கள் ஐந்தாண்டுகளுக்குள் திருப்பி செலுத்தப்பட வேண்டியவை.
- நீண்ட கால கடன்கள் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் திருப்பி செலுத்தப்பட வேண்டியவை.

# ஆ. ரொக்கக் கடன்கள் :
## Cash Credits




- இவ்வகை ஏற்பாட்டில் வங்கி தனது வாடிக்கையாளருக்கு ஒரு குறிப்பிட்ட அளவு வரை பணம் கடன் பெற அனுமதிக்கிறது.
- பயன்படுத்தப்பட்ட கடன் தொகைக்கு மட்டுமே வட்டி சுமத்தப்படுவதேயன்றி, மொத்த கடனுக்கும் வட்டி வசூலிக்கப்படுவதில்லை.

# இ. மேல்வரைப்பற்று
## Overdrafts

- நடப்பு கணக்கு வைத்திருப்போர், தங்கள் கணக்கிலுள்ள பணத்திற்கு மேல் ஒரு குறிப்பிட்ட அளவு வரை பணத்தை மிகைப்பற்றாக எடுத்துக் கொள்வதற்கான ஒரு உடன்பாடாகும்.



# இ. மேல்வரைப்பற்று

## Overdrafts

- மிகைப்பற்று தொகைக்கு மட்டுமே வட்டி சுமத்தப்படுகிறது.




- மிகைப்பற்றானது ஒரு குறுகிய காலத்திற்கு மட்டுமே அனுமதிக்கப்படுகின்ற ஒரு தற்காலிக கடனாகும்.


## ஈ. உண்டியல்களை வாங்குதல் மற்றும் கழிவு செய்தல் :
## Purchasing and Discounting of Bills




- வங்கிகள் தனது வாடிக்கையாளர்களிடமிருந்து உண்டியல்களை கொள்முதல் செய்து, உண்டியல்களின் தொகைகளிலிருந்து கழிவுகளை கழித்தபின் வரும் நிகரத்தொகை வாடிக்கையாளரின் கணக்கில் வரவைக்கிறது.
- உண்டியல்களை வாடிக்கையாளரின் சார்பாக பெற்று வசூலுக்கு அனுப்புகிறது.

## ஈ. உண்டியல்களை வாங்குதல் மற்றும் கழிவு செய்தல் : Purchasing and Discounting of Bills

- உண்டியல்களின் காலநிறைவின் போது வங்கி அவ்வுண்டியல்களின் மீது பணம் பெறுவதற்காக அவற்றை, அவற்றின் ஏற்பாளர்களுக்கு அனுப்புகிறது.



## ஈ. உண்டியல்களை வாங்குதல் மற்றும் கழிவு செய்தல் : Purchasing and Discounting of Bills





- உண்டியல் மறுப்பு ஏற்படும் போது வங்கியானது உண்டியல் தொகையுடன் செலவுத் தொகையையும் சேர்த்து வாடிக்கையாளரிடம் இருந்து வசூலிக்கிறது.

# துணைப் பணிகள்:

## SECONDARY FUNCTIONS

- துணைப் பணிகளை முகமை பணிகள் என்றும், பயன்பாட்டு பணிகள் என்றும் இரு வகையாகப் பிரிக்கலாம்.



# 1.முகமை பணிகள்: Agency functions

## அ. காசோலை, உண்டியல் மற்றும் வட்டி வசூலித்தல்:


## Collection of cheque, bill, and interest



- காசோலைகள், உண்டியல்கள், கடன் வாக்குறுதிப் பத்திரம், லாப ஈவு சான்றானை மற்றும் வட்டி போன்றவற்றை வாடிக்கையாளர்கள் சார்பாக, வங்கிகள் வசூலிக்கும் சேவைகளை மேற்கொள்கின்றன.
- இச்சேவைக்கு வங்கி ஒரு சிறு தொகையை சேவைக் கட்டணமாக வசூலிக்கிறது.

# ஆ. நிலை ஆணைகளை நிறைவேற்றுதல்: Executing standing instructions

- வாடிக்கையாளரிடமிருந்து நிலை ஆணைகளை பெற்ற பின்பு வங்கி காப்பீட்டு கட்டணத்தொகை, சந்தா தொகை மற்றும் தொடர் கட்டணத் தொகைகளையும் செலுத்துகிறது.
- இச்சேவைக்கு ஒரு சிறிய தொகையை சேவைக் கட்டணமாக வசூலிக்கிறது.



# இ.பிணையங்களை வாங்குதல் மற்றும் விற்றல்:
## Purchase and sale of securities



- வாடிக்கையாளரிடமிருந்து கட்டளைகளைப் பெற்ற பின்பு, வங்கியின் வாடிக்கையாளர் சார்பாக பத்திரங்களை வாங்கவும் மற்றும் விற்கவும் செய்கிறது.
- இதற்காக வங்கி சிறிய கட்டணத்தை தரகாக பெறுகிறது.

# ஈ. நிதி மாற்றம் செய்தல் :
## Transfer of funds

- வாடிக்கையாளர்களின் சார்பாக வங்கிகள் பணத்தை ஒர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு பணவிடை (Draft), தந்தி மற்றும் இணையம் (Internet), மூலமாக மாற்றம் செய்கிறது.



# 2.பயன்பாட்டு பணிகள் மற்றும் சேவைகள்:
## Utility Functions or services
## அ.விலையுயர்ந்த பொருள்களை பாதுகாத்தல்:
## Safe custody of valuables



- வங்கிகள் வாடிக்கையாளருடைய ஆபரணங்கள், நகைகள், மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை தங்கள் பாதுகாப்பின் கீழ் வைக்கிறது.

# அ.விலையுயர்ந்த பொருள்களைபாதுகாத்தல்:
## Safe custody of valuables

- வங்கிகள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மேற்கூறிய பொருட்களுக்கு அத்தாட்சி வழங்குகிறது.
- இச்சேவைக்காக ஒரு நியாயமான கட்டணத்தை வங்கி வசூலிக்கிறது.



# ஆ. பாதுகாப்பு பெட்டக வசதி :
## Safety locker facility

- இவ்வகை சேவையில் வாடிக்கையாளருக்கு ஒதுக்கப்பட்ட பாதுகாப்பு பெட்டகத்தில் எல்லாவிதமான விலை உயர்ந்த பொருட்களையும் வைத்து பாதுகாக்க அனுமதிக்கிறது.
- வாடிக்கையாளர் இதற்காக ஒரு குறிப்பிட்ட தொகை வாடகை தரவேண்டியுள்ளது.




# ஆ. பாதுகாப்பு பெட்டக வசதி :
## Safety locker facility



- வாடிக்கையாளர் விலையுயர்ந்த ஆபரணங்கள், நகைகள், ஆவணங்கள் போன்றவற்றை பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்துக் கொள்கிறார்.


# இ உண்டியல்களை ஏற்றல் : Accepting bills




- வங்கிகள் வாடிக்கையாளர்கள் சார்பாக உண்டியல்களை ஏற்பு செய்கின்றன.
- இதன் மூலம் வியாபாரத் தொடர்புகளை ஊக்குவிக்கிறது.
- இச்சேவைக்காக ஒரு சிறுகட்டணம் வதூலிக்கப்படுகிறது.

# ஈ. மூலதன வெளியீட்டில் பொறுப்புறுதி ஏற்றல்
## Underwriting of Capital issues

- பொறுப்புறுதி ஏற்றல் என்பது, வங்கிகள் நிறுமங்களுக்கு வழங்கும் ஒரு சேவையாகும்.
- நிறுமங்களின் பங்குகள் மற்றும் கடன்பத்திரங்களை பொதுமக்களுக்கு விற்பதற்கு பொறுப்பு ஏற்கிறது.
- இச்சேவைக்காக ஒரு குறிப்பிட்ட தரகு வீதத்தை பெறுகிறது.



# உ. வியாபாரம் மற்றும் வாடிக்கையாளர்களைப் பற்றி தகவல்களை வழங்குதல்:

## Providing informations about customers and trade

- தங்கள் வாடிக்கையாளர்களின் நாணயத்தன்மையைப் பற்றி தேவைப்படும் நபர்களுக்கு அவ்வப்போது தகவல்களை தருகிறது.
- இதனால் வாடிக்கையாளர்கள் பல்வேறு நபர்களிடமிருந்து கடன் வசதி பெற முடிகிறது.




# உ. வியாபாரம் மற்றும் வாடிக்கையாளர்களைப் பற்றி தகவல்களை வழங்குதல்:
## Providing informations about customers and trade

- வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு உதவுவதற்காக வியாபாரம் தொழிற்சாலைகள் மற்றும் நாட்டின் பொருளாதார நிலை பற்றிய புள்ளி விவரங்களை அவ்வப்போது பிரசுரம் செய்கிறது.




# ஊ.அயல்நாட்டுவியாபாரத்தில்உதவிசெய்தல்
## Helps in foreign trade

- நாணயக்கடிதம் (Letter of Credit) வழங்குதல் மூலமாகவும், உண்டியல்களை வட்டம் செய்வதாலும் அயல்நாட்டு வியாபார மேம்பாட்டிற்கு துணை புரிகிறது.



# எ.பயணிகள் காசோலை வெயிடுதல்
## Issues Travellers cheque




- இக்காசோலை ஒரு வங்கியின் பல்வேறு இடங்களில் உள்ள கிளைகளின் பணம் பெறுவதற்காக வழங்கப்படும் காசோலையாகும்.
- இது பல்வேறு முகமதிப்பில் வெளியிடப்படுகிறது.


# எ.பயணிகள் காசோலை வெயிடுதல்
## Issues Travellers cheque

- பணத்தை பல்வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்வதில் உள்ள இடையூறை குறைக்கிறது.
- வங்கிகள் வாடிக்கையாளரின் மாதிரி கையொப்பம் (Specimen Signature) பெற்றபின், பயணிகள் காசோலையை வழங்குகிறது.
- இக்காசோலை வங்கியரால் மேல்ஒப்பம் இடப்படுகிறது.



# ஏ.பரிசு காசோலை வெளியிடுதல்
## Issues Gift Cheques

- திருமணம், பிறந்த நாள் மற்றும் பண்டிகை நாட்களில் ஒரு வாடிக்கையாளர் தனது சொந்தக்காரர்கள் மற்றும் நண்பர்களுக்கு பரிசாக வழங்கும் காசோலையாகும்.
- பல்வேறு முகமதிப்பில் வங்கிகள் இம்மாதிரியான பரிசு காசோலைகளை வெளியிடுகின்றன.



## ஒ.பங்கு பத்திர முதலீட்டுக்கான (Stock Invest) காசோலை வெளியிடுதல் :





- பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களை பெற விண்ணப்பிப்பதற்கான ஒரு வங்கி தனது வாடிக்கையாளருக்கு வெளியிடும் ஒரு காசோலையாகும். இத்திட்டத்தின் கீழ் பங்குகள் வாடிக்கையாளருக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தேதி வரை அவருக்கு வட்டி கிடைக்கிறது.

# ஓ.பங்கு பத்திர முதலீட்டுக்கான (Stock Invest) காசோலை வெளியிடுதல் :

- பங்குகளோ அல்லது கடன் பத்திரங்களோ வாடிக்கையாளருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது உறுதியான பின்பே வாடிக்கையாளரின் கணக்கிலிருந்து, நிறுமத்தின் கணக்கிற்கு பணம் மாற்றம் செய்யப்படுகிறது.



# ஒ.பங்கு பத்திர முதலீட்டுக்கான (Stock Invest) காசோலை வெளியிடுதல் :




- தேவையான அளவு இட்டு வைப்பு பெற்ற பின்பே வங்கி இவ்வகை காசோலைகளை வழங்குகிறது.

# ஒ. கடன் அட்டை சேவை புரிதல்:
## Provides credit card services




- பல இடங்களுக்கு பணத்தை எடுத்து செல்வதில் ஏற்படும் இடையூறை தடுப்பதற்காக வங்கிகள் கடன்அட்டைகளை வெளியிடுகிறது.
- இவ்வட்டை கடன் பெறுவதற்கான ஒரு சாதனமாக பயன்படுகிறது.

# ஓ. கடன் அட்டை சேவை புரிதல்:
## Provides credit card services

- கடன் அட்டை வைத்திருப்பவர் தானியங்கி இயந்திரத்தில் (ATM) ஒரு குறிப்பிட்ட அளவு வரை பணம் எடுக்கலாம்.
- மேலும், இவ்வட்டையை கொண்டு பொருட்கள் மற்றும் சேவைகளை பெறுவதற்கு உபயோகிக்கலாம்.



# ஔ. தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (ATM) :

- வங்கிகளில் செலவாகும் நேரத்தை குறைப்பதற்காக தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- இதன் மூலம் எந்த நேரத்திலும் பணம் பெறலாம்.

